

கனமழை எச்சரிக்கையை தொடர்ந்து வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் சி பழனி உள்ளிட்ட நகராட்சி துறை அதிகாரிகளுடன் ஆலோசித்தார். மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் அ.சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, நகராட்சி ஆணையர் வீர முத்துக்குமார் , துணைத் தலைவர் சித்திக் அலி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.




தர்மபுரி மேற்கு மாவட்டம் அரூர் பேருந்து நிலையம் எதிரில் உள்ள கட்சியின் அலுவலகமான அண்ணா மணிமண்டபம் எதிரே முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அமைய உள்ள இடத்தினை நகர கழக செயலாளர் முல்லைரவி தலைமையில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆய்வு செய்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.சித்தார்த்தன், ஒன்றிய செயலாளர்கள் கோ.சந்திரமோகன், வே.சௌந்தரராசு, நகர நிர்வாகிகள் செல்வதயாளன், விண்ணரசன், மோகன், கணேசன், தொழிலதிபர் ப.எழில்மறவன், ஐ.டி.விங் கு.தமிழழகன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிவிப்பு!



தஞ்சை, அக். 15 -

தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தஞ்சை வடக்கு மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் வருகின்ற 18.10.2024 வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு கும்பகோணம் சகாஜிநாயக்கன் தெரு, தஞ்சை வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கூட்டத்தில் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் சிறப்பு அழைப்பாளர்கள் குறித்த நேரத்தில் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் :**

1. தொகுதி பார்வையாளர்கள் அறிமுகம்.
2. வாக்காளர் பட்டியல் சரிபார்கும் பணி.
3. OMR படிவம்.
4. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நாகையில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிர்வாகிகளுடன் சந்திப்பு!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் வேண்டுகோள்!



நாகை, அக். 15 -

நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள்திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்களை கடை கோடி மக்களுக்கும் கொண்டு செல்லும் வகையிலும், நாகை மாவட்டத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல நாகை மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியை நியமனம் செய்து உத்தரவிட்டுள்ளார்கள்.

நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரான அன்பில் மகேஷ் பொய்யாமொழி நாகை மாவட்டத்திற்கு இன்று (15.10.2024 ) மாலை 4.00 மணியளவில் நமது நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகத்திற்கு வருகைதந்து நிர்வாகிகளை சந்திக்க உள்ளார்.

அமைச்சர் வருகையின் போது நாகை மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகத்தினர் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்ட கழகச் செயலாளரும்,தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் கூறியுள்ளார்.

### தலைமை: அமைச்சர் மா.சுப்பிரமணியன்! முன்னிலை: எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. – இரா.துரைராஜ் எம்.சி.!

# 142 (அ) வட்டச் செயலாளர் எஸ்.பி.கோதண்டம் இல்லத் திருமண வரவேற்பு விழா!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்–சா.சி.சிவசங்கர் மற்றும் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. பங்கேற்பு!



சென்னை, அக்.15 -

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்குபகுதி 142வது (அ) வட்ட தி.மு.கழக வட்ட செயலாளர் எஸ்.பி.கோ தண்டம் புதல்வன்கே.மௌலீஸ்வரன் என்கிற வரனுக்கும், என்.பிரியங்கா என்கிற கன்னிகைக்கும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி மாதம் 3-ஆம் தேதி 20.10.2024, ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு மேல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் தமிழ்நாடு முதல மைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் சைதாப்பேட்டை அப்துல்ரசாக் தெருவில் உள்ள எஸ்.பி.எஸ். திருமண மண்டபத்தில் திருமண வரவேற்பு விழா நடைபெறவுள்ளது.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையிலும், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும் 10-வது மண்டலகுழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்குபகுதி கழகசெயலாளரும், 13-வது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., பகுதி துணை செயலாளர் ஆர்.ரமேஷ், 142-வது வட்ட கழக செயலாளர் எம். நாகா, மாவட்ட பிரதிநிதிகள் கிண்டி ஆர்.எல்.செல்வம், பொன்ஜெய்சிங், பால்கார் ரவி, வட்டகழக நிர்வாகிகள் எம்.ஷேக்தாவூத், கே.சி.பழனிபாரதி, வீடியோ எஸ். எழில், ஆர்.எல்.காந்தன், பி.தேவிகா, எம்.பாலாஜி, பி.வரதராஜன், ஆம்பூர் ரவி, பாரதிபாஸ்கர், பிரபு ஆகியோர் வரவேற்கின்றனர்.

திருமண வரவேற்பு விழாவிற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ப. தாயகம்கவி, எஸ்.அரவிந்த்ரமேஷ், காரப்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, ஜெ.கருணாநிதி, ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, க.தனசேகரன் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

மேலும் பாலவாக்கம் க. சோமு, வேளச்சேரி பி.மணிமாறன், கவிஞர் காசிமுத்து மாணிக்கம், மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.குண சேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு. மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், வாசுகி பாண்டியன் ஆகியோர் மணமக்களை வாழ்த்த வருகை தர உள்ளனர். மேலும் இந்நிகழ்விற்கு பகுதி கழக ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கண்ணன், மு. இராசா, எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதி யழகன், சு. சேகர், துரைகபிலன், வே. ராஜன், அ.ம.துரைவீரமணி, ஜி.வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், ப.ரவி, எம்.கே.ஏழுமலை, உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், அ.அரிகிருஷ்ணன், ஆர்.பாலசுந்தரம், பி.ஜே.பாஸ்கர், வ. செல்வகுமார், த.பஷீர், வீ. கனிமொழி, சைதை பகுதி கழக நிர்வாகி கள் களக்காடி எல்லப்ன், த.சம்பத், கவிதா கௌதமன், வி.பி.ஜானகிராமன், இ.முருகேசன், ஆர். ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு. பாக்கியலட்சுமி, ஆர்.அருணகிரி,

மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் ப.சுப்பிரமணி, தா.மோகன்குமார், ரத்னா லோகேஸ்வரன், வேளச்சேரி வே.ஆனந்தம், மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் சைதைசாதிக், அஞ்சல்ராமன், நா.மணிகண்டன், எம்.எஸ்.ஹரிபாபு, கோ.பாஸ்கரன், வட்டகழக செயலாளர்கள் சை.மு. சேகர், ந.தமிழரசு, அட்கோகமலநாதன், நா.ராதா கிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், மு.இராஜா, க.மணி, கோ.சண்முகம், எஸ்.பாட்சா, எஸ்.ஆர். செந்தில், மாவட்ட பிரதி நிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என். சிவமணி, ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, ஜி.பாபு, அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ. எஸ்.பழனி, எம்.எஸ்.மணி, டி.எஸ்.ரவிச்சந்திரன், என்.சம்பந்தம், கு.கார்த்திகேயன், தீ.ராஜ்குமார், ஆர்ட்ஸ் குமார், வெ.கிஷோர்குமார், கே.தாஸ், கே.பிரபு, பிரஸ் கார்த்திக், அ.தமீம்அன்சாரி, மாவுமில் ஸ்ரீதர், எம்.மாறன், பி.ஆர். துரைராஜ், ச.தினகர், வெ.புருஷோத்தமன், என். தீனதயாளன் பி.நரேஷ்குமார், எஸ்.ரவீந்திரகுமார், கே. ஸ்டெல்லாமேரி, ஜி .ராஜேஸ்வரி, பி.செண்பகம்,

அணிகளின் பகுதி அமைப்பாளர்கள், த.மணி, ஜி.ஜே. மோசஸ், ஆர்.எஸ்.ரமேஷ், ஆர்.ஜி.கற்பகம், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, கோயில் எஸ். மணி, கே .ஜான், சார்பு சரவணன், 142வது வட்டகழக நிர்வாகிகள் ஆர்பார் முனுசாமி, எப்.சாகுல்அமீது, கேபிள் முருகன், ஆர்.கோபி, எம்.கதிர், கே.முருகேசன், வி.பி.காந்தி, கே.விஜய், ஆர்.மோகன், கே.கசாலி, இந்நிகழ்வில் அனைவரையும் அன்புடன் வரவேற்கும் எஸ்.பி.குமார், எஸ்.பி.எத்திராஜ், எஸ்.பி. செல்வராஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

# புரட்சி வணக்கம்!

முரசொலிக்குமட்டுமல்ல
முத்தமிழ் நாட்டிற்கே
அருந்தமிழ்ச் செல்வம்நீ
ஆற்றல் மறவன்நீ.

சிரித்த முகத்தோடு
சிந்தனைத் திறத்தோடு
வரித்த கொள்கைக்கே
வாழ்வளித்த செல்வம்நீ.

உன்னால் உயர்ந்தோரில்
ஒருசாட்சி நானும்தான்.
என்னைத் தேற்றவும்நீ
எழுந்தால்தான் உண்டு.

தகவல் களஞ்சியமே
தமிழின் விளைநிலமே
பகலைப்பறிகொடுத்துப்
பார்வை இழந்தோமே.



எதிர்பாரா செய்தியாய்
இறப்பை எமக்களித்த
புதுயுகப் போர்வாளே
புரட்சி வணக்கங்கள்.

கவிஞர்.
**பொன்.செல்வகணபதி.**

### சவுதி அரேபியாவில் சிக்கித் தவித்த தமிழர்கள் உள்பட

# 18 இந்தியர்கள் தாயகம் திரும்ப நடவடிக்கை!

## தம்மாம் கிழக்கு மண்டலம் அயலக அணி வெங்கடேசன் – ஆரிஃப் மக்பூல் மேற்கொண்டனர்!

சவுதி, அக். 15 -

திமுக அயலக அணி சார்பில் (தம்மாம் கிழக்கு மண்டலம்) சவுதி அரேபியா சிக்கித் தவித்த தமிழர் உள்பட மொத்தம் 18 இந்தியர்கள் தாயகம் திரும்ப அனைத்து உதவிகளும் செய்து தரப்பட்டது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி பாதிக்கப்பட்டவர் பெயர்: முத்தையா தகப்பனார் பெயர்: சுப்பையா அறந்தாங்கி புதுக்கோட்டை மாவட்டம் முத்தையா கடந்த ஆறு வருட காலமாக வழக்கு காரணமாக தாயகம் திரும்ப முடியாமல் சிக்கித் தவித்து வந்தார்.

இதுபோல் கேரளா, கர்நாடகா, ஆந்திரா, உத்திர பிரதேஷ், பீகார், ராஜஸ்தான் மாநிலத்தைச் சார்ந்த 18 பேருக்கு பல்வேறு வழக்குகள் காரணமாக இந்தியாவுக்கு திரும்ப முடியாமல் இருந்தார்கள்.

இதனை தொடர்ந்து #NRTIA அயலக அணி மயிலாடுதுறை #வெங்கடேசன் துணை அமைப்பாளர் திருச்சி_ஆரிஃப்_மக்பூல் ஆகியோரை தொடர்பு கொண்டு இருவரும் இணைந்து தொழிலாளர் நீதிமன்றம் சென்று வழக்கு தொடர்ந்து சட்ட பூர்வமாக வழக்கை முடித்து வைத்தோம். ( Final Exit ) இறுதிப் பயணச் சான்றிதழ் கிடைத்தது, ( Final Exit ) இறுதிப் பயணச் சான்றிதழ் இரண்டு கட்டமாக வழங்கப்பட்டது.

சவுதி அரேபியா அரசாங்கம் அனைத்து உதவிகளும் பெற்று மற்றும் இந்திய தூதரகம் ரியாத் ஒத்துழைப்புடன் அனைத்து உதவிகளும் செய்யப்பட்டது.

NRTIA அனைத்து உதவிகளும் சட்டபூர்வமாக செய்து தாயகம் திரும்பினார்கள் குடும்பத்தார்களும் முயற்சிகள் மேற்கொண்டனர்.

மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சி ஆரிஃப் மக்புல், முகவை சீனி முஹம்மது, கமால் பாட்சா, NRTIA பொறுப்பாளர் பிரேம்நாத், தமிழ் சங்க தலைவர் சுரேஷ் பாரதி, அபூ ரயான், முஹம்மது ஃபாரூக், செட்டிநாடு மணிக்குமார், கிரிக்கெட் நூர், திருச்சி யூனுஸ் , ஜியான், பாரூக் ராஜா, மற்றும் அனைத்து நண்பர்களும் நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையம் முதன்மைச் செயலாளர் மயிலாடுதுறை வெங்கடேஷன், துணை அமைப்பாளர் திருச்சி ஆரிஃப் மக்பூல், முகவை சீனி முஹம்மது,

தம்மாம் கிழக்கு மண்டல சவுதி அரேபியா, அயலக அணி துறையூர் கமால் பாட்ஷா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# சென்னைக்கு ரெட் அலர்ட்!

சென்னை , அக் 15 -

சென்னைக்கு ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் நெல்லையில் இருந்து சென்னை விரைகிறது தமிழ்நாடு பேரிடர் மீட்பு படை. சென்னையில் ஏற்கனவே 3 குழுக்கள் உள்ள நிலையில் மேலும் 6 குழுக்கள் சென்னை விரைகின்றன. “ முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நெல்லையில் நிலை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 6 குழுக்கள் சென்னை விரைகின்றன. திருச்சியில் 3 குழுக்கள், கோவையில் 3 குழுக்கள், மேட்டுபாளையத்தில் 3 குழுக்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளது.

# மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்!

சென்னை, அக். 15 -

விழுப்புரம் மாவட்டம் மீனவர்கள் கடலுக்கு இன்றும் நாளையும் செல்ல வேண்டாம் என மீன்வளத் துறை அறிவுறுத்தி உள்ளது. காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக விழுப்புரம் மாவட்டத்தில் கனமழை பெய்யும் என ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டது. கடலில் சூறாவளி காற்று வீசும் என்பதால் விழுப்புரம் மாவட்டம் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் எனவும் மீன்வளத்துறை தெரிவித்தது.



கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட செல்வசிந்தாமணி குளத்தின் நீர்மட்ட உயர்வின் காரணமாக செல்வ சிந்தாமணி குளத்தில் இருந்து பெரிய குளத்திற்கு உபரி நீரின் மதகுகள் திறந்து வைக்கப்பட்டதை கோவை மாநகராட்சி பொதுசுகாதாரக்குழு தலைவர் பெ.மாரிசெல்வன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார் முன்னதாக தூர்வாரப்பட்ட இராஜ வாய்க்காலையும் பார்வையிட்டார் . உடன் வட்டக்கழக செயலாளர் நா.தங்கவேலன் சுகாதார ஆய்வாளர் தனபால் பகுதி துணைச்செயலாளர் என்.ஜே. முருகேசன் மற்றும்ராஜேஷ். ,சந்துரு,சுமன்,வாரிராஜேந்திரன்,,குமார்,, நகர் நலச்சங்க நிர்வாகி மணி மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்



சவுதி அரேபியாவில் சிக்கித் தவித்த இந்தியர்கள்– தமிழர்கள் 18 பேர் தாயகம் திரும்ப தி.மு.க. அயலக அணி சார்பில் மயிலாடுதுறை வெங்கடேசன், ஆரிஃப் மக்பூல் ஆகியோர் நடவடிக்கை மேற்கொண்டு அனுப்பி வைத்தனர்.